(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **2**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 சனவரி 19 புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ உதய கம்மன்பில,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ,** நிதி அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ அசோக அபேசிங்ஹ**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ லசஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ நாலக பண்டார கோட்டேகொட**

**கௌரவ (திருமதி) டயனா கமகே**

**கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

**கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன**

**கௌரவ யதாமிணீ குணவர்தன**

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹுன் பிரதீப் விதான**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைச் சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2021 திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**கோட்டாபய ராஜபக்ஷ**

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்களை விடுத்தார்:—

**I**

"கௌரவ பிரதம அமைச்சர் அவர்களே, கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, கௌரவ சபை முதல்வர் அவர்களே, அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் முதற்கோலாசான்களே, கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே, முதலில் நான் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும், ஆரோக்கியமும், செழிப்பும் மிகுந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!

நீங்கள் அறிந்தவாறாக, கடந்த ஆண்டு நம் அனைவருக்கும் சவால் மிகுந்ததும் அழுத்தம் மிகுந்ததுமான ஓர் ஆண்டாக அமைந்தது. முழு உலகையும் பீடித்த கொவிட்-19 இடையூறு இச்சபையையும் விட்டுவைக்கவில்லை. அந்த நிலைமையின் மத்தியிலும், எமது பொறுப்புகளுக்கு அமைவாக, நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் அமர்வுகளை நடத்துவதற்கும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் எம்மால் முடியுமாக இருந்தது.

இந்த நிலைமைகளின் போது, பாராளுமன்றம் சுமுகமாகத் தொழிற்படுவதை சாத்தியமாக்கிய அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தலைமையிலான அனைத்துப் பணியாட்டொகுதியினருக்கும், படைக்கலச் சேவிதருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டையும் நன்றியையும் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

2022 ஆம் ஆண்டு புதிய ஆரம்பம் ஒன்றைக் குறிப்பதுடன் இச்சபையும் அதனைக் கருத்திற் கொண்டு அதன் மேம்பாட்டிற்காக சில விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது பொருத்தமானதாக அமையும் என நான் நம்புகின்றேன்.

பாராளுமன்றச் சபா மண்டபத்தினுள் நுழைந்தவுடன், நீங்கள் அனைவரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கருதப்படுகின்றீர்கள். அந்த கௌரவமான பதவிப் பெயர் நீங்கள் மரியாதையான விதத்தில் உரையாற்றுவதையும் நடந்து கொள்வதையும் தேவைப்படுத்துவதுடன் அது சபையை பிரதிபலிப்பதாகவும் இருக்கின்றது. நான் பாராளுமன்றத்திற்குப் பிரவேசித்தபோது அவ்வாறே கற்றுக்கொண்டேன். நூலகத்தில் புத்தகங்களை வாசித்து, காலஞ்சென்ற கௌரவ காமினி திசாநாயக்க, கௌரவ ரணசிங்க பிரேமதாச, கௌரவ லலித் அத்துலத்முதலி போன்ற பேச்சாளர்களைப் பார்த்து அவர்களுடைய உரைகளைச் செவிமடுத்து பல வார தயார்படுத்தலின் பின்னரே நான் பாராளுமன்றத்தில் முதற்றடவையாக உரையாற்றினேன். புதிய உறுப்பினர்களாக, நாம் எம்மைப் பற்றிய சிறந்த கருத்துப்பதிவை வழங்க விரும்பினோம், ஏனெனில், அவ்வாறு செய்யாதிருப்பது அவமானகரமானதாக இருந்திருக்கும். ஆனால் இன்று, ஒரு சில கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தங்கள் உரைகளை முன்கூட்டியே தயார் செய்கின்றனர், நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர் அல்லது தொடர்புடைய விடயங்களைப் பேசுகின்றனர். நூலகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் 330 புத்தகங்கள் மாத்திரமே கௌரவ உறுப்பினர்களால் இரவல் பெறப்பட்டுள்ளதுடன் இவற்றுள் 122 புத்தகங்கள் 'நாவல்' என்னும் தலைப்பின் கீழ் வருபவையாகும். இரவல் பெறப்பட்ட 94 புத்தகங்கள் அரசறிவியல் பற்றியவையாகவும் 27 புத்தகங்கள் சமூகவியல் பற்றியவையாகவும் காணப்பட்டன.

பொருளியல் பற்றிய 11 புத்தகங்களும், விஞ்ஞானம் பற்றிய ஐந்து புத்தகங்களும், சட்டம் பற்றிய நான்கு புத்தகங்களும், தொழில்நுட்பம் பற்றிய மூன்று புத்தகங்களும், கல்வி பற்றிய ஒரு புத்தகமும் மற்றும் சிங்கள இலக்கியம் பற்றிய ஒரு புத்தகமும் மாத்திரமே கௌரவ உறுப்பினர்களால் இரவல் பெறப்பட்டிருந்தன.

225 உறுப்பினர்களைக் கொண்டதொரு சபைக்கு இது சங்கடத்தை ஏற்படுத்தும் விடயமாகும். விடயப்பொருள் மீதான தயார்படுத்தலின்மை மற்றும் அறிவின்மை ஆகியவை உரைகளின் பகுதியாக மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாத மொழி

பயன்படுத்தப்படுதல் மற்றும் பெரும்பாலான உரைகளும் கூற்றுக்களும் அரசை வழிநடத்துவதற்குப் பதிலாக அரசியல் இலாபம் தேடுவதற்காக மேற்கொள்ளப்படுதல் ஆகியவற்றுடன் இழிவுபடுத்தல்கள், பொய்கள் மற்றும் தவறான குற்றச்சாட்டுகளுக்கும் இட்டுச் சென்றுள்ளன. இது இறுதியில் வெட்கக்கேடான, மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாத நடத்தைக்கு வழிவகுக்கின்றது.

சபாநாயகர் என்றவகையில், சபையை செயற்திறன் மிக்கதாக வழிநடத்துவதும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரினதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதும் எனது பொறுப்பாகும். அதன் உறுப்பினர்கள் கௌரவமாக நடந்து கொள்வர் என்னும் நிச்சயத்துடன், சபை, அதன் நிலையியற் கட்டளைகள் மற்றும் ஏனைய நடைமுறைகள் ஆகியவை இவ்விடயங்களை வசதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தின் மாண்பினைப் பேணுதல் நம் அனைவரினதும் மிகவும் புனிதமான கடமை என்பதை கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் இச்சபையின் மீது நம்பிக்கை இழப்பின், அதன் அர்த்தம் அவர்கள் சனநாயகத்தில் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பதாகும். அதன் விளைவுகள் இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பிரசைகளுக்கும் மிகவும் பாரதூரமானதாக அமையும். இதனைப் புரிந்து கொண்டு, சபையினுள் அற்ப அரசியல் நாடகங்களைப் புறந்தள்ளி அனைத்து விடயங்களிலும் தேசிய நலனையும் நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அனைவரினதும் நலன்களையும் மனதிற்கொள்ளுமாறு நான் உங்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றேன். இந்நாட்டு மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன் அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பு உறுப்பினர்களும் இராஜதந்திரிகள் போன்று பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

இச்சபையின் நற்பெயரை மீளக் கட்டியெழுப்புவதற்கு எனக்கு உதவ வேண்டும் எனவும் நாம் இதனை எவ்வாறு அடைய முடியுமென என்னுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் நான் உங்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றேன். இரு தரப்பினதும் முதற்கோலாசான்கள் விசேடமாக மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்வதுடன் தங்கள் தரப்பினரை வழிநடத்தவேண்டும் எனவும் நான் எதிர்பார்க்கின்றேன்.

விவாதங்களின் தரத்தினையும் உறுப்பினர்களின் நடத்தையையும் மேம்படுத்துவதற்காக நான் பின்வரும் வரைவு முன்மொழிவுகளை தயாரித்துள்ளதுடன் அவை கலந்துரையாடலுக்காகவும் ஏற்றுக்கொள்வதற்காகவும் முன்வைக்கப்பட்டுள்ளன :

வரவுசெலவுத் திட்டம் மற்றும் செயலாற்றுகைகள் மீதான சுயாதீன நோக்கொன்றை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக விசேடமாக பணி வழங்கப்பட்ட ஒரு சுயாதீன ஆராய்ச்சிப் பகுப்பாய்வு அலுவலகம்;

பொருளியல், தொழில்நுட்பம், முகாமைத்துவம், தலைமைத்துவம், சமூகவியல் போன்ற தலைப்புகளின் மீதான மற்றும் எவரேனும் கௌரவ உறுப்பினர் ஒருவர் கோரும் வேறேதேனும் தொடர்புடைய தலைப்பின் மீதான துறைசார் நிபுணர்களின் கலந்துரையாடல்கள் மற்றும் சமர்ப்பித்தல்கள் ஆகியவை பாராளுமன்ற அமர்வுகள் முடிவுற்ற பின்னர் மாலை வேளைகளில் நடத்தப்படல்; மற்றும்

வெவ்வேறு மொழிகளில் தேர்ச்சி பெற விரும்பும் அல்லது கல்வியைத் தொடர விரும்பும் கௌரவ உறுப்பினர்களுக்கான மொழி மற்றும் கல்வி வசதிகள்.

கௌரவ பாராளுமன்றம் சிறப்பாகத் தொழிற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக இம்முன்மொழிவுகளுக்கு ஏதேனும் மேம்பாடுகள் அல்லது திருத்தங்களை முன்வைப்பதற்கு அல்லது வேறு சிறந்த முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்."

**II**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் 2021 திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி 'ஒதுக்கீடு' எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகின்றேன் ."

**III**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 140 இன் பிரகாரம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் போது சேவையாற்றுவதற்காகக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர் குழாத்திற்கு உள்ளடக்குவதற்கு என்னால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என பாராளுமன்றத்திற்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ சாந்த பண்டார

கௌரவ வேலு குமார்

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய"

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2016 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XIX ஆம் பகுதியையும் ;

(ii) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XXIII ஆம் பகுதியையும் ;

(iii) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVIII ஆம் பகுதியையும், ஒன்பதாவது தொகுதியின் XXI ஆம் பகுதியையும்; மற்றும்

(iv) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் VI மற்றும் VII ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் IV மற்றும் V ஆம் பகுதிகளையும், ஒன்பதாவது தொகுதியின் I ஆம் பகுதியையும்சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) கல்வி அமைச்சர் —

(i) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை இராணுவத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை கடற்படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) கல்வி அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தின் துறைகள் தொடர்பில் உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2164/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான நீதி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அமர்வு (இல. 1 ) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 1.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 ( 5 ) தொழிற்படுமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வு (இல. 2 ) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2022 சனவரி 20 ஆம் திகதி முதற்கொண்டு, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் போதான செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள் (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 9 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. தெரிவுக் குழு (இல.1) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 114 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் போது சேவையாற்றுவதற்காக தெரிவுக் குழுவானது, தவிசாளராக சபாநாயகரையும் பாராளுமன்றத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய அரசியல் கட்சிகளின் தலைவர்களையோ அல்லது அவர்களின் நியமத்தர்களையோ உள்ளடக்கிய பன்னிரண்டு (12) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. தெரிவுக் குழு (இல.2) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இன்றைய தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் போது தெரிவுக் குழுவில் பின்வரும் பன்னிரண்டு (12) உறுப்பினர்களும் சேவையாற்றுவார்களாக :—

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 50(2) மற்றும் 111 ஆகியவற்றின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2022 சனவரி 19 ஆம் திகதி முதற்கொண்டு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 50(2) மற்றும் 111 ஆகியன இடைநிறுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. அரசாங்க நிதி பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 (1) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர், அக்குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களிலிருந்து அக் குழுவினாலேயே தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. பாராளுமன்ற அமர்வு (இல. 3 ) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், இன்றைய தினம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2022 சனவரி 20 ஆம் திகதி, வியாழக்கிழமை சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 ( 5 ) தொழிற்படுமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. பாராளுமன்ற அமர்வு (இல. 4) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2022 சனவரி 20 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. சிறப்புரிமை:** கௌரவ நிரோஷன் பெரேரா வழிமொழிய கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல முன்மொழிய பின்வருமாறு பிரேரித்தார், — தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்களால் 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. ஒத்திவைப்பு (ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து அதிமேதகு சனாதிபதி அவர்கள் முன்வைத்த கொள்கைப் பிரகடனம்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக" என வர்த்தக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.23 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 6.00 மணியாகிவிடவே விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அதிலிருந்து விவாதம் 2022 சனவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை தொடரும்.

அவ்வேளை, நேரம் பி.ப. 6.00 மணியாகிவிடவே, தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2022 சனவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.